# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
# I TERM EXAMINATION - JULY - 2017

## SUBJECT - TAMIL
## CLASS – X

Time: 3 Hours | Maximum Marks: 80
நேரம்: 3 மணி | மொத்த மதிப்பெண்கள்: 80

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | |
|---|---|---|---|
| SECTION: A | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு: அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: B | Writing | - | 20 Marks |
| பிரிவு: ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION: C | Grammar | - | 15 Marks |
| பிரிவு: இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: D | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு: ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

குறிப்பு :

- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பிரிவு - அ

**1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

வாழும் உயிர்களுக்கு முதல் தேவையாக இருப்பது காற்றே. ஆனால் இக்காற்று மண்டலம் பெருகிவரும் தொழிற்சாலைகளால் கேடு அடைந்து வருகிறது. பயிர்களுக்குத் தேவையான உரங்கள், பூச்சிக் கொல்லிகள் இவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் புகையில் நச்சுத்தன்மை மிகுந்துள்ளது. இது காற்றோடு கலக்கின்ற பொழுது காலனை விரைவில் அழைக்க வழி வகுக்கிறது. நாகரிகத்தின் பெயரால் புகைக்கப்படும் சிகரெட்டுகளால் காற்று மாசடைகிறது. திறந்த வெளி அடுப்புகளின் புகையால் சமையல் செய்பவர் உள்ளிழுக்கும் பென்சோ-ஏ-பைரீன், 400 சிகரெட்டுகளில் உள்ள நச்சுத் தன்மைக்கு இணையானது.

சாலைகளில் ஓடுகின்ற உந்து வண்டிகளில் இருந்து வெளிப்படும் புகை சுற்றுப்புறத்தை மிகவும் பாதிக்கிறது. தோல் தொழிற்சாலை, சாயத் தொழிற்சாலை போன்றவற்றிலிருந்து வரும் கழிவு நீரில் வேதிப்பொருள்கள் கலந்துள்ளன. இந்நீர் ஆற்று நீரோடு கலந்து மிகப்பெரிய தீமைகளை விளைவிக்கிறது. பெருநகரங்களில் சாக்கடை நீர், குடிநீரோடு கலந்து விடுகிறது. அதனால் மஞ்சள் காமாலை, காலரா, டைபாயிடு, போன்ற நோய்கள் பரவுகின்றன. காற்று மண்டலத்தில் ஏற்படும் தீமையை அகற்ற வல்லன மரங்கள். சாலை ஓரங்களிலும் பொது இடங்களிலும் மரங்களை வளர்க்க வேண்டும். ஒரு மரத்தை வெட்டினால் நான்கு மரங்களை வளர்க்க வேண்டும் என்ற உறுதிப்பாடு நம் அனைவருக்கும் வேண்டும்.



LIBRARY

1. வாழும் உயிர்களுக்கு முதல் தேவையாக இருப்பது எது?

அ) இடம்
ஆ) உணவு
இ) நீர்
ஈ) காற்று

2. 400 சிகரெட்டுகளில் உள்ள நச்சுத்தன்மைக்கு இணையானது ___________

அ) ஆக்ஸிஜன்
ஆ) பென்சோ-ஏ-பைரீன்
இ) கார்பன்-டை-ஆக்சைடு
ஈ) நைட்ரஜன்

3. குடிநீர் சாக்கடை நீரோடு கலப்பதால் உண்டாகும் பெரிய நோய்களில் ஒன்று ______________

அ) டைபாயிடு
ஆ) பிளேக்
இ) இருமல்
ஈ) சலி

4. காற்று மண்டலத்தில் ஏற்படும் தீமையை அகற்றக் கூடியது எது?

அ) நிலம்
ஆ) நீர்
இ) காற்று
ஈ) மரங்கள்

5. ஒரு மரத்தை வெட்டினால் ___________மரங்களை வளர்க்க வேண்டும் என்ற உறுதிப்பாடு ஒவ்வொருவரின் மனதிலும் ஏற்பட வேண்டும்.

அ) மூன்று
ஆ) நான்கு
இ) ஐந்து
ஈ) ஆறு

2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)

**அன்னை தெரேசா** ஆகஸ்ட் 26, 1910 பிறந்து - செப்டம்பர் 5, 1997 ஆம் ஆண்டு காலமானார். இவர் அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்தியக் குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். 1950 ஆம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழைஎளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் தருவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றியவர் இவர். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் பிறர் அன்பின் பணியாளர் சபையினை நிறுவினார்.

1970 ஆம் ஆண்டுக்குள் இவர் சிறந்த சமூக சேவகர் எனவும், ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டார். இதற்கு மேல்கம் முக்கெரிட்ஜ் என்பவரின் சம்திங் பியுடிபுல் ஃபார் காட் என்ற ஆவணப்படம் ஒரு முக்கிய காரணமாகும். இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும், 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும்

610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக்கொண்டிருந்தது. இதில் எய்ட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை அடங்கும்.

1. **அன்னை தெரேசா எத்தனை ஆண்டு காலம் வாழ்ந்தார்?**

அ) 96 வருடம்
ஆ) 97 வருடம்
இ) 98 வருடம்
ஈ) 99 வருடம்

2. **அன்னை தெரேசாவின் இயற்பெயர் யாது?**

அ) அருட்சகோதரி
ஆ) பரிந்து பேசுபவர்
இ) சமூக சேவகர்
ஈ) ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ

3. **இவர் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆண்டு எது?**

அ) 1976
ஆ) 1799
இ) 1979
ஈ) 1796

4. **அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவர் இறப்பின் போது எத்தனை நாடுகளில் இயங்கிக் கொண்டிருந்தது?**

அ) 123
ஆ) 124
இ) 125
ஈ) 126

5. **அன்னை தெரேசா 1980 ஆம் ஆண்டு பெற்ற விருது யாது?**

அ) பாரத் விபூசன்
ஆ) பாரத் ரத்னா
இ) பத்ம பூசன்
ஈ) நோபல் பரிசு

**3. கீழுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் திரண்ட கருத்தைச் சுருக்கி வரைக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக. (5)**

மொழியென்பது சமூகத்தால்தான் வளர்ச்சி பெறும். மொழி இன்றேல் சமூகமாக இயங்க முடியாது. எனவே, ஒன்றுபட்ட பொதுவாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கு மொழியே சிறந்த கருவியாக அமைகின்றது. பொதுமக்கள் தாய்மொழியையே சிறந்த ஒரு கருவியாகக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக, நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்கு நமது தாய்மொழியையே

கையாளுகின்றோம். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், குலங்கள், நிலைகள், தொழில்கள் ஆகியவற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவினரும் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதைக் காணும்போது தாய்மொழியின் பேராற்றலை என்னவென்று கூறுவது?

## பகுதி - ஆ

4. உனது பகுதியில் மின்சார வசதி வேண்டி மின்சாரத்துறை ஆணையருக்கு ஓர் கடிதம் எழுதுக.

**அல்லது**

நீ சென்று வந்த இன்பச் சுற்றுலா குறித்து உன் பெற்றோருக்கு ஓர் கடிதம் எழுதுக. **(6)**

**(உமது முகவரி:** மதன் / மது, கதவு எண் - **16,** நேதாஜி வீதி, திண்டுக்கல் - 623 007 எனக்கொள்க**)**

**5. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக. (8)**

அ) முன்னுரை - சிறு சேமிப்பு - சேமிப்பின் அவசியம் - சிறுதுளி பெருவெள்ளம் - அவசரத்தேவை - இன்றியமையாமை - வளமான வாழ்வு - முடிவுரை.

**அல்லது**

ஆ) முன்னுரை - அறிவியல் ஆபத்துக்கள் - சமுதாய சீர்கேடுகள் – விளைவுகள் - சுத்தம் சோறு போடும் - நோயற்ற வாழ்வு - முடிவுரை.

**அல்லது**

இ) முன்னுரை - நான் விரும்பும் கவிஞர் - விரும்பக்காரணம் - நாட்டுப்பற்று - சமுதாய முன்னேற்றம் - விழிப்புணர்வு - முடிவுரை

## பகுதி - இ

**6) சான்று தருக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

**1. மகரக் குறுக்கம்**

அ) முஃடீது
ஆ) மருண்ம்
இ) கடலை
ஈ) வெளவால்

**2. தெரிநிலை வினைமுற்று**

அ) படம்
ஆ) உழுதான்
இ) கண்ணன்
ஈ) உழவன்

3. தொடர் மொழி

அ) கண்
ஆ) செய்தான்
இ) அந்தமான்
ஈ) கோதை வந்தாள்

4. அடுக்குத்தொடர்

அ) வருக வருக
ஆ) படபட
இ) சடசட
ஈ) அண்ணன் தம்பி

5. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?

அ) அறிவினா
ஆ) ஏவல் வினா
இ) அறியா வினா
ஈ) ஐய வினா

7.இலக்கணக்குறிப்பு தருக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1. கடலை

அ) ஐகாரக்குறுக்கம்
ஆ) ஔகாரக் குறுக்கம்
இ) மகரக் குறுக்கம்
ஈ) ஆய்தக்குறுக்கம்

2. அவன் பொன்னன்

அ) குறிப்புப் பெயரெச்சம்
ஆ) தெரிநிலை பெயரெச்சம்
இ) குறிப்பு வினை முற்று
ஈ) தெரிநிலை வினை முற்று

3. ஒரு சொல் தன் பொருளையும் குறித்து, தனக்கு இனமான பொருளையும் குறித்து வரும்.

அ) ஒன்றொழி பொதுச்சொல்
ஆ) இனங்குறித்தல்
இ) அடுக்குத்தொடர்
ஈ) இரட்டைக்கிளவி

4. நடு மையம்

அ) இனமொழி விடை
ஆ) மறைவிடை
இ) சுட்டு விடை
ஈ) ஒருபொருட்பன்மொழி

5. சென்று கேட்டான்

அ) எச்சம்
ஆ) பெயரெச்சம்
இ) வினையெச்சம்
ஈ) வினைமுற்று

8) நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1. 'வளையல்' - இச்சொல்லில் ஐகாரம் ______________ மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கிறது.

அ) அரை
ஆ) ஒரு
இ) ஒன்றரை
ஈ) இரண்டு

2. முற்றெச்சம் ( உதாரணம் தருக)

அ) மெல்ல நடந்தான்
ஆ) உண்டான்
இ) படித்த மாணவன்
ஈ) படித்தனன் தேறினான்

3. தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது __________

அ) அறிவினா
ஆ) ஐயவினா
இ) அறியா வினா
ஈ) கொளல் வினா

4. குறிப்பால் ஒன்றை நீக்கி மற்றொன்றை சுட்டிக்காட்டுவது ________________

அ) ஒன்றொழி பொதுச்சொல்
ஆ) விகாரச்சொல
இ) தகுதி வழக்குச்சொல்
ஈ) ஆகுபெயர்

5. ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது ______________ ஆகும்.

அ) தனிமொழி
ஆ) தொடர்மொழி
இ) பொதுமொழி
ஈ) இரட்டைக்கிளவி

9. அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1. பஃறீது (இதில் உள்ள குறுக்கத்தை எழுதுக)

அ) ஐகாரக்குறுக்கம்
ஆ) ஆய்தக்குறுக்கம்
இ) ஔகாரக்குறுக்கம்
ஈ) மகரக்குறுக்கம்

2. படித்தான் (வினையெச்சமாக மாற்றுக)

அ) படிப்பான்
ஆ) படித்து முடித்தான்
இ) அன்மொழித்தொகை
ஈ) இனங்குறித்தல்

3. வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர் (இதன் இலக்கணக்குறிப்பு எழுதுக)

அ) ஒன்றொழி பொதுச்சொல்
ஆ) விகாரச்சொல்
இ) அன்மொழித்தொகை
ஈ) இனங்குறித்தல்

4. மேற்பகுதி (இதன் ஒருபொருட் தரும் பன்மொழியை எழுதுக)

அ) குழிதாழ்ந்து
ஆ) உயர்ந்தோங்கி
இ) மீமிசை
ஈ) நடுமையம்

5. மருளும் ( மகரக்குறுக்கமாக மாற்றுக)

அ) மருள்ம்
ஆ) போல்ம்
இ) மருண்ம்
ஈ) போண்ம்

10. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1. அ) பல்+தீது என்பது பல்தீது எனப்புணரும்.
ஆ) பல்+தீது என்பது பஃதீது எனப்புணரும்.
இ) பல்+தீது என்பது பலதீது எனப்புணரும்.
ஈ) பல்+தீது என்பது பஃறீது எனப்புணரும்.

2. அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு பொருளை உணர்த்துவது தொடர்மொழி

ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு பொருளை உணர்த்துவது பொதுமொழி

இ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு பொருளை உணர்த்துவது மொழி

ஈ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு பொருளை உணர்த்துவது தனிமொழி

3. அ) நன்னூல் கிடைக்குமா? எனக்கடைக்காரரிடம் வினவுவது கொடைவினா.
ஆ) நன்னூல் கிடைக்குமா? எனக்கடைக்காரரிடம் வினவுவது கொளல்வினா.
இ) நன்னூல் கிடைக்குமா? எனக்கடைக்காரரிடம் வினவுவது ஐயவினா.
ஈ) நன்னூல் கிடைக்குமா? எனக்கடைக்காரரிடம் வினவுவது அறியாவினா.

4. அ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது ஒன்றொழிப்பொதுச்சொல்.
ஆ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது இனங்குறித்தல்
இ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது அடுக்குத்தொடர்
ஈ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது இரட்டைக்கிளவி

5. அ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் தெரிநிலை வினைமுற்று ஆகும்.
ஆ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் குறிப்பு வினைமுற்று ஆகும்.
இ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் வினைமுற்று ஆகும்.
ஈ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் எச்சம் ஆகும்.

## பகுதி - ஈ

**11. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்கலையும் ஒன்று. இது நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமையத்தக்க அரியதொரு கலை. இது மக்களுக்கு அறிவு புகட்டி அவர்களை உயர்ந்த இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது. மேடைப்பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேரறிஞர் அண்ணா, ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் முதலியோர் ஆவர்.

மேடைப்பேச்சுக்குக் கருத்துக்களே உயிர்நாடி என்றாலும், அக்கருத்துக்களை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன. பேச்சுக்கலையில் வெற்றிபெற வலிமையான கருத்துக்கள் தேவை; ஆயினும், அவற்றைக் கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேசத் தெரிதல் வேண்டும். பேச்சாளரின் நெஞ்சிலே உள்ள கருத்து, கேட்பவர்கள் நெஞ்சங்களிலே பாய வேண்டும். மின்சாரம் பாயக் கம்பி கருவியாக இருப்பதுபோலக் கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது. ஆதலால், பேசும்மொழி அழகியதாகவும் தெளிவாகவும் சிக்கலற்றதாகவும் இருத்தல் வேண்டும். அழகிய செஞ்சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் கருத்தினை உணர்த்தவல்லதே சிறந்த மொழி நடை

1. ஆய கலைகள் எத்தனை வகைப்படும்?

அ) 46
ஆ) 60
இ) 64
ஈ) 63

2. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் யார்?

அ) பேரறிஞர் அண்ணா
ஆ) கல்யாண சுந்தரனார்
இ) கம்பர்
ஈ) குமரன்

3. மேடைப்பேச்சிற்கு உயிர்நாடி எது?

அ) உவமைகள்
ஆ) நகைச்சுவை
இ) பாடல்கள்
ஈ) கருத்துக்கள்

4. கருத்தை விளக்க மொழி எவ்வாறு உள்ளது?

அ) பாடலாக
ஆ) கருவியாக
இ) காரணமாக
ஈ) உதாரணமாக

5. சிறந்த மொழி நடை எவ்வாறு இருக்க வேண்டும்?

அ) எளிதாக
ஆ) இனிமையாக
இ) கடினமாக
ஈ) இனிமையற்றதாக

**12. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (4)**

'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.'

1. 'இடைப்படச் சேய' என்பதன் பொருள் யாது?

அ) உயரத்தில்
ஆ) அருகில்
இ) தொலைவில்
ஈ) பள்ளத்தில்

2. 'மன்னிய' என்பதன் பொருள் ______________

அ) விரும்பத்தக்க
ஆ) நிலைபெற்ற
இ) ஆபரணம்
ஈ) மாலை

3. அறிவும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்கள் யார் பக்கம் எப்போதும் இருப்பார்கள்?

அ) சான்றோர் பக்கம்
ஆ) சாலார் பக்கம்
இ) தங்களின் பக்கம்
ஈ) யார் பக்கமும் இல்லை

4. இப்பாடல் இடம்பெற்ற நூல் யாது?

அ) ஏலாதி
ஆ) தமிழ் வளர்ச்சி
இ) நற்றிணை
ஈ) புறநானூறு

13. கீழ்க்கண்ட திருக்குறளின் விடுபட்ட சொற்களை நிரப்புக. (4 x 1/2 = 2)

1. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் ______________
தேரினும் அஃதே துணை

2. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
______________ வாயாற் சொலல்.

3. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் ______________

4. ______________ காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

**14. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **(8)**

1. மாணிக்க வாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?

2. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

3. தேரா மன்னா என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

4. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?

**15. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **(10)**

1. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

2. பெண்ணுரிமைக்கான வழி முறைகளை பெரியார் வழி நின்று நிறுவுக.

3. அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்து எழுதுக.

4. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

5. குழந்தைத் திருமண எதிர்ப்பு குறித்து ஈ.வே.ரா. கூறியனவற்றைத் தொகுத்து எழுதுக.

**16. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **(8)**

1. மெல்ல மெல்ல மற என்னும் சிறுகதையை மையக்கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.

2. சட்ட வகைகள் குறித்து கட்டுரை எழுதுக.

3. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களை சுருக்கி எழுதுக.

**>>>>>>>>>>>><<<<<<<<<<<<**